**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**

**D061 இலக்கியத் திறனாய்வு**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. திறனாய்வுக்கு இணையான ஆங்கிலச் சொல் எது?
2. விமர்சனம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யார்?
3. இலக்கியத்தைப் படிப்பவரின் அறிவையும் ரசனையையும் தரத்தையும் உயர்த்துவது எது?
4. காந்தியடிகளுக்கு மன எழுச்சி தந்த எழுத்தாளர்கள் யாவர்?
5. தத்துவ நிலையில் அமைந்த புதுமைப்பித்தனின் கதையின் பெயர் என்ன?
6. தமிழில் பகுப்புமுறைத் திறனாய்வைப் பயன்படுத்தியவர்களில் ஒருவரைக் குறிப்பிடுக?
7. திறனாய்வாளனுடைய இரண்டு கண்களாகக் கருதப்படுபவை யாவை?
8. அழகியல் திறனாய்வில் முன்னோடிகளில் இருவரின் பெயரினைக் குறிப்பிடுக.
9. பகுப்புமுறை உளவியலை வகுத்துச் சொன்ன அறிஞர் யார்?
10. இறையனார் களவியல் நூலில் எத்தனை நூற்பாக்கள் இடம்பெற்றுள்ளன?
11. உரை என்பதற்குரிய மூன்று பொருள்கள் யாவை?
12. பரிபாடலுக்கு உரையெழுதியவர் யார்?
13. "வியாக்கியானச் சக்கரவர்த்தி" என்று அழைக்கப்படுபவர் யார்?

14. புதுமைப்பித்தனும் கு.ப.ராவும் எந்தப் பத்திரிக்கையில் தொடர்ந்து எழுதி வந்தார்கள்?
15. ஈழத்துத் திறனாய்வாளர்களுள் காந்தியத் தாக்கம் கொண்டவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. திறனாய்வு என்றால் என்ன?
2. படைப்புக்குரிய படைப்பாளி பெறுகிற உந்துதல்கள் யாவை?
3. இலக்கியத்தின் மொழி என்ன என்ன தளங்களிலிருந்து செய்யப்படுகிறது?
4. திறனாய்வாளனுடைய சமூகப் பொறுப்பு யாது?
5. அழகியல் உத்திகள் குறித்து எழுதுக.
6. விதிமுறைத் திறனாய்வு என்றால் என்ன?
7. இலக்கிய உரைகளின் பொதுவான அமைப்புகளைக் கூறுக.
8. தலித்தியத் திறனாய்வு என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக (3x15=45)**

1. (அ) திறனாய்வாளனுக்குரிய ஆற்றலும் பயிற்சியும் பணியும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அழகியல் திறனாய்வில் முன்னோடிகள் குறித்து ஆராய்க.

2. (அ) இலக்கிய உரைகளின் சிறப்பான பண்புகளும் மாண்புகளும் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) திறனாய்வாளர்களில் மூன்று தரப்பினர் குறித்து விளக்கி வரைக.

3. (அ) திறனாய்விற்கு இலக்கியச் சிற்றிதழ்களின் பணிகள் குறித்து ஆராய்க.

(அல்லது)

(ஆ) புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் தமிழ் இலக்கியத்திற்குச் செய்த பங்களிப்பைக் குறித்து விளக்குக.

❋ ❋ ❋